# COLOMBO COMMERCE RESOURCE CENTRE
## கொழும்பு வணிகவள நிலையம்

மாதிரி வினாத்தாள் - 01

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2017

வரலாறு - I　　　　நேரம் : 1 மணி

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைகளை புள்ளடித்தாளின் மீது (x) என அடையாளமிடுக.

(1) இலங்கை வரலாற்றை தொடர்ச்சியாக கற்க உதவும் பிரதான உள்நாட்டு இலக்கிய மூலாதாரமாக அமைவது,

(1) தீபவம்சம்　(2) மகாவம்சம்　(3) போதிவம்சம்　(4) தாடாவம்சம்

(2) இலங்கையின் முன் வரலாற்றுக்கால அஸ்தி வைக்கப்பட்ட கல்லறை மயானம் அமையப்பெற்ற இடங்களுள் ஒன்று,

(1) உடரஞ்சா மடம　(2) பாஹியன்கல　(3) இப்பன்கட்டுவ　(4) மினிகாகல்கந்த

(3) இலங்கையின் மானிட வாழ்க்கை மூன்று கட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவற்றை ஒழுங்குமுறையில் குறிப்பிடுவது

(1) ஹோலோசீன் யுகம், மெசலோயிக்யுகம், பிளைத்தோசீன்

(2) புராதன காலம், மத்திய காலம், நவீன் காலம்

(3) வரலாற்றுக்கு முற்பட்ட காலம், முன்வரலாற்றுக் காலம், வரலாற்றுக்காலம்

(4) பழைய கற்காலம், மத்தியகற்காலம், புதியகற்காலம்

(4) வரலாற்றுக்கு முற்பட்ட தாழ்நில ஈரவலயக் குகைகளை உள்ளடக்கிய விடைத்தொகுதி

(1) பெல்லன்பதி பெலஸ்ஸ, மினிஹால்கந்த, புத்தல

(2) பாஹியன்கல, பட்டதொம்லென, பெலிலென

(3) பண்டாரவளை, ஹோட்டன் சமவெளி, நில்கல

(4) மினிஹால்கந்த, புத்தல, பாஹியன்கல

(5) புராதன கல்வெட்டுக்களில் "பருமக" என்று குறிப்பிட்டுள்ளதன் பொருள்

(1) குடும்ப தலைவன்　(2) கோத்திரதலைவன்

(3) பிரபுவர்க்கம்　(4) கிராமதலைவன்

(6) பண்டைய இலங்கையின் அரசின் வளர்ச்சியாகக் கருதப்படுவது,

(1) பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரம் ஒருமுகப்படுத்தப்படல்

(2) பருமகமார்களின் அதிகாரம் வளர்ச்சியடைதல்

(3) மக்களை வழிநடாத்தக்கூடிய பிரதானிகளின் தோற்றம்

(4) நாட்டை தன்னிறைவு அடையச் செய்தல்

(7) வசப மன்னன் காலத்தில் யாழ்ப்பாண பிரதேசம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

(1) மலையரட்டை　(2) வன்னி பிரதேசம்　(3) தக்கின தேசம்　(4) நாகதீபம்

(8) புனித வெள்ளரசுமரம் இலங்கைக்கு கொண்டு வரும் போது அப்போதைய ஆட்சியாளன்

(1) பண்டுகாபயன்　(2) துட்டகைமுனு மன்னன்

(3) தேவநம்பியதீசன்　(4) 1ம் இராஜசிங்கன்

(9) “அலகபய மகாராஜ” எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட மன்னன்

(1) வலகம்பா மன்னன் (2) முதலாம் காசியப்ப மன்னன்

(3) கஜபாகு மன்னன் (4) 3ம் உதய மன்னன்

(10) இலங்கையின் கற்காலத்தின் நிலவிய சடங்கு சம்பிரதாயங்கள் பற்றி ஓரளவிற்கு அறிந்துக் கொள்ளக்கூடிய தகவல்

(1) பாவனையில் இருந்த கல்லாயுதத்தின் மூலம் (2) இறந்த உடல்கள் புதைக்கப்பட்ட விதம்

(3) வீடுகளின் அமைப்பு முறை (4) சடங்கு மற்றும் சம்பிரதாய முறைகள்

(11) இலங்கையின் பண்டைய விஞ்ஞான தொழிநுட்பத்தின் உச்சக்கட்டமாக குறிப்பிடத்தக்கது,

(1) கேத்திர கணித உருவிலான சிறிய கல்லாயுதங்கள்

(2) உரஞ்சாமடமவில் கண்டுபிடிக்கப்பட்ட வீடு

(3) சீகிரிய பூங்காவின் நீர் மலர்கள்

(4) களிமண் ஓடங்களிலான மயானம்

(12) கலிங்கல் தொட்டியில் வைக்கப்படும் ரஜமொஹல் எனும் கற்றூணை “நீர் விளக்கு” என்று வர்ணித்துக் கூறிய கல்வெட்டு

(1) வெஸ்கிரிய (2) தோணிகல (3) மிகிந்தலை (4) சீகிரிய

(13) “கொலைக்குற்றவாளிக்கு மரண தண்டனை, மாடு திருடியவனின் நெற்றியில் மாட்டின் உருவத்தை குறி சுடுதல்” முதலிய தண்டணைகள் பற்றிக் கூறும் கல்வெட்டு

(1) கொண்டவட்டாவான் தூண் கல்வெட்டு (2) பதுளை தூண் கல்வெட்டு

(3) மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு (4) வேவல்கெட்டிய கல்வெட்டு

(14) இலங்கையின் கட்டடக்கலையிலும், சிற்பக்கலையிலும் முனைப்பான இந்து செல்வாக்கு எந்த காலங்களில் காணப்பட்டது

(1) அனுராதபுரம், தம்பதெனிய (2) பொலநறுவை, கம்பளை

(3) யாப்பகூவ, பொலநறுவை (4) கண்டி, கோட்டை

(15) பண்டைய இலங்கை மன்னர்கள் பிறப்பித்த சுற்றாடல் தொடர்பான சட்டங்களுள் இன்றைக்கும் பொருந்தக்கூடிய சிறந்த சட்டம் எது?

(1) குளத்து நீரை பெறும் வயல்களில் நெல் தவிர வேறு தானியங்கள் பயிரிடக்கூடாது.

(2) நீர் நிலைகளில் வாழும் பறுழவகழளக் கொல்லக்கூடாது

(3) பசு, எருமை மாடுகளைக் கொல்வோருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும்

(4) மேட்டு நிலங்களில் உள்ள காடுகளை வெட்டியழிக்கக் கூடாது.

(16) 1638 - 1766 ஆகிய காலப்பகுதிகளில் ஒல்லாந்தருக்கு கண்டி அரசருக்கு இடையில் இடம்பெற்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட அரசர்களின் பெயர்கள்

(1) 1ம் இராஜசிங்கன் - 1ம் விமலதர்ம சூரியன்

(2) 2ம் இராஜசிங்கன் - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

(3) ராஜாதிராஜசிங்கன் - 2ம் இராஜசிங்கன்

(4) செனரத் - 2ம் இராஜசிங்கன்

(17) தொட்டகமுவே ராகுல தேரர், காரகல வனரத்ன தேரர், புத்த புத்திர தேரர், தர்மசேன தேரர் முதலிய பண்டிதர்களால் இலக்கிய மலர்ச்சி ஏற்பட்ட காலப்பகுதிகளாக அமைவது,

(1) கோட்டை, அநுராதபுரம் (2) கோட்டை, தம்பதெனியா

(3) பொலன்நறுவை, தம்பதெனியா (4) அநுராதபுரம், பொலன்நறுவை

(18) A) அதிகமான கல்வெட்டுக்கள் வெட்டியமை

B) துலாபாரக் கொள்கையை கடைப்பிடித்தமை

C) ரன்கொத்த விகாரையைக் கட்டியமை

D) வறுமையால் வாடிய மக்களுக்கு உணவுகளை வழங்கியமை

மேற்கூறப்பட்டவற்றுடன் தொடர்புடைய அரசனைக் குறிப்பிடுக.

1. 1ம் விஜயபாகு 2. நிஸங்க மன்னன்

3. 3ம் விஜயபாகு 4. 4ம் பராக்கிரமபாகு

(19) பின்வரும் போர்த்துக்கேயப் போர்க்களங்களுடன் உரிய ஆண்டுகளை இணைக்கும் போது அமையும்

| | | | |
|---|---|---|---|
| 1) | தந்துறை | A | 1594 |
| 2) | பலன | B | 1602 |
| 3) | ரந்தெனிகல | C | 1630 |
| 4) | கன்னொறுவ | D | 1638 |

(1) ABCD (2) ACDB (3) CDAB (4) DCBA

(20) பின்வரும் கண்டி அரசர்களை கால ஒழுங்கு முறைப்படி வரிசைப்படுத்தினால் அமையும் விடை

A சௌரத்

B சேனாசம்பத விக்கிரமபாகு

C வீர பராக்கிரம நரேந்திர சிங்கன்

D கரலியத்த பண்டார

(1) ACDB (2) BDAC (3) CDAB (4) DACB

(21) கண்டி இராசதானி காலத்தில் வளைத்தலுக்கான வரி எப்பெயர் கொண்டு அழைக்கபட்டது

(1) ரீபத்த (2) குருவே பத்த (3) மொல்லிகொட (4) ஹெந்த பத்த

(22) உலகப் புகழ் பெற்ற பௌத்த வழிபாட்டிடம் அங்கோர்வட் அமைந்துள்ள இடம்

(1) தாய்லாந்து (2) பர்மா (3) சீயம் (4) கம்பூச்சியா

❋ கீழ் குறிப்பிட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23ஆம் 24 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A நூல் நூற்கும் இயந்திரம்

B புகையிரத எஞ்சின்

C மெக்கடம் முறை

D பறக்கும் நூனாழி

(23) மேல்குறிப்பிட்ட தரவுகளில் மூலம் நெசவுக் கைத்தொழிலுக்கு உதவிய சாதனங்கள் யாவை?

(1) AB (2) AC (3) AD (4) BC

(24) மேல்குறிப்பிட்ட தரவுகளில் மூலம் போக்குவரத்து துறைக்கு உதவிய சாதனங்கள் யாவை?

(1) AB (2) CD (3) BC (4) BD

(25) பின்வரும் கூற்றுக்களுள் கைத்தொழில் புரட்சியுடன் தொடர்பானவற்றுள் பிழையானவை

A - ஜேம்ஸ் ஹா கீரிவ்ஸினால் நூல் நூற்பதற்கான இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமை

B - நாடுகாண் பயணங்களால் பேரரசுகள் பரவியமை

C - ஐரோப்பாவில் போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி கைத்தொழில் புரட்சிக்கு காரணமாகியது

D - ஜோன் மக்கடம் என்பவரால் பெருந்தெருக்கள் அமைக்கும் முறை கண்டறியப்பட்டமை

E - இலங்கையில் பெருந்தெருக்கள் உருவானது இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட அதே காலமாகும்.

F - பெனி/ பென்ஸ் தபால் சேவை இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டமை

(1) CE (2) AE (3) BC (4) DF

(26) 1795 ஆம் ஆண்டு இராஜாதி ராஜசிங்க மன்னனை சந்திப்பதற்காக கண்டிக்கு வருகை தந்த ஆங்கிலத் தூதுவன்

(1) ஜோன்பைபஸ் (2) ஹியுபொயிட் (3) ரொபட் அன்ட்ரூஸ் (4) மெக்டோவல்

(27) கண்டி மகாதிகாரமான பிலிமத்தலாவையால் ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் எனும் பெயரில் அரசாக்கப்பட்ட நாயக்க வம்ச இளவரசன்

(1) கன்னுசாமி (2) முத்துசாமி (3) துரைசாமி (4) நரணப்பா நாயக்கர்

(28) ஐரோப்பிபாவில் முடியாட்சிக்கு எதிராக மக்களாட்சியை தோற்றுவித்த முக்கிய புரட்சியாக பின்வருவனவற்றில் எவற்றைக் கூறலாம்

(1) ஆங்கிலப் புரட்சி
(2) ரஷ்யாப் புரட்சி
(3) பிரான்சியப் புரட்சி
(4) அமெரிக்க புரட்சி

(29) பின்வரும் கூற்றுக்கள் அடங்கியுள்ள யாப்பு

- அரசுக்கழகம்
- சர்வசன வாக்குரிமை
- நிர்வாகக்குழு முறை
- அரச செயலாளர் மூவர்

(1) 1833 கோல்புறூக் (2) 1910 குறூமக்கலம் (3) 1920 மனிங் (4) 1931 டொனமூர்

(30) ஆங்கிலேயராட்சியின் போது இலங்கையர் இனபேதம் மறந்து ஒன்றிணைந்த சந்தர்ப்பம்

(1) மது ஒழிப்பு இயக்கம்
(2) பெருந்தோட்டம் அமைத்தல்
(3) இலங்கை தேசிய சங்கம்
(4) தொழிலாளர் இயக்கம்

(31) 1ம் உலக யுத்தத்தின் போது நட்பு நாடுகள் (நேச நாடுகளின்) அணியில் இடம் பெற்ற நாடுகள்

(1) பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா
(2) பிரித்தானியா, இத்தாலி, ரஷ்யா
(3) ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா
(4) ஜேர்மனி, ஆஸ்தரியா , ரஷ்யா

(32) சோவியத் நாடு தகர்ந்தமையால் உண்டாகிய பாதகமான விளைவாக கருதத்தக்கது பின்வருவனவற்றில் யாது?

(1) உலக அதிகாரச் சமநிலை அற்றுப் போதல்
(2) சமூகவுடைமைவாத முறைமை பரவுவதற்கு இருந்த வாய்ப்பு குறைதல்
(3) வார்சே அமையத்தைக் கலைத்தல்
(4) சமூகவுடைமைவாத நாடுகளுக்கு ருசிய உதவி கிடையாமை

# COLOMBO COMMERCE RESOURCE CENTRE
## கொழும்பு வணிகவள நிலையம்

மாதிரி வினாத்தாள் - 01

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2017

வரலாறு - II  நேரம் : 2 மணி

* பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.
* பகுதி I இன் முதலாம் வினாவுடன் பகுதி II இல் இன்னும் நான்கு வினாக்களும் விடை அளிக்க வேண்டும்
* பகுதி III இல் ஒரு வினாவுக்கும் விடை அளிக்க வேண்டும்
* எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டும்

### பகுதி - I

01) அ) பின்வரும் வரலாற்று இடங்களை இலங்கை புற உருவப்படத்திலும் உலகப்படத்திலும் குறித்து பெயரிடுக.

1) மாதோட்டம், சுக்கிரதித்த, அநுராதபுரம், சீதாவக்கை, இரணைமடு, கண்டி, அலிகல, கோகண்ண தித்த, பொலன்னறுவை, உடரஞ்சாமடம், குருளு வாவி, காலி

2) மத்திய தரைக்கடல், கருங்கடல், போர்த்துக்கல், மும்பாய், ரோம், பாக்கு நீரிணை

ஆ) A,B,C,D என்ற வரலாற்று தகவல்களோடு தொடர்புடைய நபர்களையும் இடங்களையும் உமது விடைத்தாளில் எழுதுக.

A - வல்லிபுர பொற்சாசனத்தில் குறிப்பிடப்படும் அரசர் யார்

B - கி.பி. 1818 சுதந்திரத்தின் மூலம் சிம்மாசன உரிமையை கோரி 1818 சுதந்திர போராட்டத்திற்கு தலைமைத் தாங்கிய நபர்

C - மாத்தளை அலு விகாரையில் திரிபிடகம் நூலை தொகுக்க உதவிய மன்னர் யார்?

D - உரோமபுரிக்கு சென்று கண்ணாடி மற்றும் பளிங்கு கற்களை கொண்டு வரதூது குழுவை அனுப்பிய மன்னன் யார்?

இ) A,B ஆகிய உருக்களை அடிப்படையாக கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வரிசைக்கிரமமாக உமது விடைத்தாளில் எழுதுக.

i) 1) A காட்டப்பட்டுள்ள உருவின் பெயர் என்ன?

2) அது எப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?

3) இது தயாரிக்கப்பட்ட உலோகம் யாது?

4) இத்தொல்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் பிறந்த மன்னர் யார்?



A

ii) 1) B காட்டப்படும் உருவின் பெயர் யாது?

2) இவ்வுரு காணப்படும் இடம் யாது?

3) எந்த யுகத்தை சார்ந்தது?

4) இவ்வுருவில் தெய்வ நம்பிக்கையின் படி இவ்உருவில் காணப்படும் தெய்வங்கள் யாது?



B

## பகுதி - II

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

(2) 1) இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட தகவல்கள் கிடைத்துள்ள குகைகள் 3 இனை பெயரிடுக.

2) முன்வரலாற்றுக்கால யுகத்தை வரலாற்றுக்கு முற்பட்ட யுகத்திலிருந்து வேறுபடுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் 3 தருக.

3) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களிற்கு இரு உதாரணங்களை எடுத்துக் காட்டி விளக்குக.

4) ஆரம்ப வரலாற்கு குடியிருப்புகளின் தன்மையை 2 விடயங்களை முன்வைத்து உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

(3) 1) எந்தவொரு நாட்டிலும் நிர்வாகத்தை கொண்டு நடாத்துகின்ற மூன்று தாபனங்களும் எவை?

2) A - அனுராதபுர முதல் மன்னன்

B - கர்ப்பிணி தாய்மாருக்கு பிரசவ விடுதிகளை அமைப்பதற்கு முன்வந்தவன்

C - இலங்கைக்கு பௌத்த சமயத்தை கொண்டு வந்தவர்

D - இஸ்லாமிய சமூகத்தினுடைய கடவுள்

பொருத்தமான விடை முறையே குறிப்பிடுக.

3) புராதன காலத்தில் இலங்கை நாட்டினுடைய அரசுரிமை கையளிக்கப்பட்ட விதத்தினை குறிப்பிட்டு உதாரணம் தருக.

4) புராதன காலத்திலேயே முன்னெடுக்கப்பட்ட பயிர் செய்கை வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(4) 1) இலங்கையில் சுற்றாடலை பாதுகாப்பதற்கு சட்டம் இயற்றிய 3 மன்னர்களின் பெயர்களை எழுதுக.

2) பின்வருவன தொடர்பாக அறவிடப்பட்ட வரிகளை ஒழுங்கு முறையில் எழுதுக.

A - குளத்து நீரை பயன்படுத்துதல்

B - சேனைப்பயிர்ச்செய்கை

C - அரசனுக்கு உரித்தான இடத்தில் பயிர் செய்தல்

D - கால்வாய்களில் மீன்பிடித்தல்

3) முற்காலத்தில் இலங்கையில் பெண்களுக்கு கௌரவமான இடங்கள் வழங்கப்பட்டிருந்தமை பற்றி உதாரணங்கள் 2 மூலம் விளக்குக.

4) சுகதேகியாக வாழும் பொருட்டு பண்டைய சுதேச உணவு முறை மூலம் பெறத்தக்க முன்மாதிரிகைப் பற்றி 2 உதாரணங்கள் தந்து தெளிவுப்படுத்துக.

(5) 1) சமூக அமைப்பு நிலையற்றதாக ஆகும் போது ஏற்படும் விளைவுகள் மூன்றினை குறிப்பிடுக.

2) பண்டைய சமூக அமைப்பில் நிலைக்குத்தான கட்டமைப்பை குறிப்பிடுக.

3) சமூக கட்டமைப்பில் காணப்படும் பிரதான அம்சங்கள் மூன்றினை குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக.

4) சமூதாயத்தில் முக்கியமானவர்கள் என கருதப்படும் மூன்று பிரிவினரை கூறி, அதில் ஒன்றை உதாரணம் தந்து விளக்குக.

(6) 1) பின்வருவனவற்றுடன் தொடர்புடையவர்களை A, B, C என்ற ஒழுங்கில் குறிப்பிடுக.

A - 1815 இல் மலையகத்தைப் பிரித்தானியர் ஆக்கிரமித்த பொழுது மலையக மன்னனுக்கு எதிராகச் செய்யப்பட்ட பிரதானி

B - 1818 சுதந்திர போராட்டத்திற்கு தலைமை வகித்த மலையகப் பிரதானி

C - 1848 கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்த பிரித்தானிய ஆளுனர்

2) 1833 கோல்புறூக் குழுவின் நிர்வாக சீர்திருத்த அம்சங்கள் நான்கைக் குறிப்பிடுக.

3) பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் பெருந்தோட்ட விவசாயத் துறையின் விருத்தியில் கோல்புறூக் அரசியல் சீர்திருத்த அம்சங்கள் எவ்வாறு பாதிப்பைச் செலுத்தியுள்ளது என்பதை இரண்டு உதாரணங்களுடன் விளக்குக.

4) பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சமூக கலாச்சார ரீதியான தாக்கங்கள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு முன்னின்று உழைத்த தலைவர்கள் நால்வரையும் அவர்கள் தலைமை தாங்கிய சமூக, கலாச்சார இயக்கங்களையும் குறிப்பிடுக. மேற்குறிப்பிட்ட ஒரு தலைவரையும் அவரது பணிகளையும் சுருக்கமாக விளக்குக.

(7) 1) பின்வரும் அம்சங்கள் இடம்பெற்ற யாப்புகளின் பெயர்களைத் தருக.

A - இருசபை பாராளுமன்றம்

B - கரை நாடு, மலை நாடு ஒன்றிணைந்தமை

C - அடிப்படை மனித உரிமைகள் முதன்முதலில் சேர்க்கப்பட்டமை

2) பின்வரும் நபர்களின் பெயர்களை அதே ஒழுங்கில் தருக.

A - சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர்

B - ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஆரம்பத் தலைவர்

C - பிரம்மஞான சங்கத்தை நிறுவியவர்

D - நகர்ப்புற தொழிலாளரின் தொழிற்சங்க தலைவர்

3) 1848 கிளர்ச்சிக்குக் காரணமாயமைந்த கோல்புறூக் சீர்த்திருத்தங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

4) 1978 குடியரசு யாப்பு அறிமுகப்படுத்தியுள்ள 3 தேர்தல்களைப் பெயரிட்டு அவை பற்றி விளக்குக.

## பகுதி - III

(8) 1) கீழ்காணும் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A - அமெரிக்கா கண்டத்தை கண்டு பிடித்தவர்

B - இரும்புத்தாதை உருவாக்குவதற்காக அடுப்பை கண்டுபிடித்தவர்

C - தொலைக்காட்சியை கண்டு பிடித்தவர்

2) கைத்தொழில் புரட்சியின் போது உற்பத்தி செய்யப்பட்ட சில புதிய ஆக்கங்கள் A, B, C, D ஆகியவற்றின் கீழ் காணப்படுகின்றன. அவற்றை உற்பத்தி செய்தவர்களின் பெயர்களை அடைப்புக்குள்ளேயிருந்து தெரிந்தெடுக்க.

A - ஆகாய விமானம்     B - தையல் பொறி

C - நீராவிப்புகையிரத எஞ்சின்     D - மோட்டார் வாகனம்

(அலெக்சாண்டர் கிரகம்பெல், றைட் சகோதரர்கள், ஜோர்ஜ் ஸ்ரீவின்சன், டெம்லர், ஜேம்ஸ் வாட், ஜோன் மக்கடம், சாமுவேல்)

3) பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணம் இரண்டு தந்து விளக்குக.

4) கைத்தொழில் புரட்சியின் விளைவுகள் 3 தந்து விளக்குக.

(9) 1) மறுமலர்ச்சி என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் தருக.

2) பின்வருவோரின் படைப்புக்கள ஒவ்வொன்று தருக.

A - லியனாடோ டாவின்சி

B - தோமஸ் மூர்

C - வில்லியம் ஹார்வே

D - நிக்கலஸ் கொப்பனிக்கஸ்

3) மறுமலர்ச்சி தோன்றுவதற்கான இரு காரணிகளை குறிப்பிட்டு விளக்குக.

4) சமய சீர்த்திருத்தத்திற்கான காரணங்கள் மூன்றினை குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக

(33) பின்வருவனவற்றுள் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் மாத்திரம் இடம்பெறும் விடை யாது?

A - உரோம டச்சுச் சட்டம் அறிமுகம்

B - உரோமன் கத்தோலிக்க மதம் அறிமுகம்

C - கோப்பி, கறுவா போன்ற வர்த்தகப் பயிர்களின் அறிமுகம்

D - நவீன அச்சுக்கலை அறிமுகம்

E - தேவாலயங்களுடன் பாடசாலை முறை ஆரம்பம்

(1) CDE (2) ADE (3) ACD (4) BCD

(34) தென் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி நிலைபெறுவதற்கு காரணமாக இருந்த ஆட்சியாளன்

(1) பாமினி ஆட்சியாளர்கள் (2) விஜய நகர ஆட்சியாளன்

(3) மொகலாய ஆட்சியாளன் (4) டில்லி சுல்தான் ஆட்சியாளன்

(35) அணிசேரா இயக்கத்தை பஞ்சசீலக் கொள்கையில் அடிப்படையில் தோற்றுவித்தவர்

(1) ஜவஹர்லால் நேரு (2) அப்துல் கமால் நசார்

(3) பிடெல் காஸ்ரோ (4) மார்ஷல் டிட்டோ

(36) பொலன்னறுவையின் முதல் சிங்கள அரசன்

(1) மகாபராக்கிரமபாகு (2) 1ம் விஜயபாகு

(3) சேனாசம்மத விக்கிரமபாகு (2) நிசங்கமல்லன்

(37) ஞடுயின் கட்சி முறை தொடர்பாக பொருத்தமானது

(1) இருகட்சி முறை நிலவுகின்றமை

(2) இடதுசாரி கட்சிகள் ஆட்சியதிகாரம் பெறல்

(3) சமய ரீதியான கட்சிகள் காணப்படுகின்றமை

(4) ஆரம்பத்திலிருந்தே பல கட்சி முறை காணப்படுகின்றமை

(38) பிரித்தானியர் ஆட்சிக்கால யாப்புகளில் காணப்பட்டதும் இன்று வரை இலங்கை அரசியலில் பிரச்சனையாக திகழ்வதற்கான ஓர் அம்சம்

(1) உத்தியோக சார்பு உறுப்பினர் தொகையை அதிகரித்தமை

(2) இனரீதியான பிரதிநிதித்துவமுறை அறிமுகமானமை

(3) சட்டவாக்க அதிகாரத்தை விட நிர்வாக அதிகாரம் மேலோங்கியமை

(4) ஆளுநரின் அதிகாரங்கள் அதிகரித்தமை

(39) சோல்பரி யாப்பு அறிமுகப்படுத்திய ஒரு விடயம்

(1) செனட்சபை அறிமுகம் (2) விகிதசம பிரதிநிதித்துவம்

(3) தேசிய அரசு பேரவை (4) அடிப்படை மனித உரிமைகள்

(40) சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இலங்கையின் நெல் உற்பத்தியை அதிகரிக்க மேற்கொண்டவற்றுள் அடங்காதது

(1) விவசாய குடியேற்றங்களை ஆரம்பித்தமை

(2) நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயம்

(3) மகாவலி அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்தியமை

(4) தானிய வரிகள் நீக்கியமை